காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6-இத. ஆ.ட. சேக்கிழார் தொண்டைமான், 3.11.1969.

நன்றி: 'தினத்தந்தி'

விலை 20 காசு

கேட்டீரா சேதி!

எச்சரிக்கை-காங்கிரசுக்கு!

காமராசருக்கும், அவரால் வழி நடத்தி அழைத்துச் செல்லப்படும் தமிழ்நாடு காங்கிரசுக்கும் பயங்கரமான அரிப்புக் கண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த அரிப்புக்கு இதுவரையில் எந்த மருந்தும் கண்டு பிடிக்கப்பட்டில்லை. காங்கிரசுக் கட்சியின் மேடைகளிலும், ஏடுகளிலும் ஒரே சவ(ட)ால்களாகக் காட்சி தருகின்றன. தன்னைத் தானே எச்சரிக்கை செய்துகொண்டு அடங்கி ஒடுங்கி நடந்துகொள்ளவேண்டிய பயங்கரவாதிகள், தி.மு.க. அரசுக்கு எச்சரிக்கை என்றபேரால் வன்முறைகளுக்கு வித்தூன்றிக்கொண்டு வருகின்றனர். இதுபோன்ற எச்சரிக்கையினைத் தராமலேயே தாக்குண்டு உதையுண்டு, கண் இழந்து, கால் இழந்து உயிரையே இழந்து தியாக முத்திரைப் பெற்றுக்கொண்டுதான் கழகம், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து கொண்டிருக்கிறது. வெறும் அறை கூவல்கள் மூலமே அரசியல் நடாத்த நினைத்து ஆலாய்ப்பறப் போருக்கு, கழகத் தொண்டன் பதில் சொல்லத் தொடங்கினால் விளைவு விபரீதமாயிருக்குமோ என்று அஞ்சாமலிருக்க முடியாது. கொஞ்சம் அடக்கத்துடனேயே அரசியல் நடத்துங்கள் என்று நாமும் முன்னதாகவே ஒரு எச்சரிக்கையைக் காங்கிரசுக்கு விடுக்கிறோம்!

கண்டிக்கத்தக்க போக்கு!

அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம், இதுவரையில் "பிராந்தியச் செய்திகள்" என்று ஒலி பரப்பி வந்ததற்கு மாறாக, தமிழக முதல்வரின் வேண்டுகோளுக்கு ஒப்பி, "மாநிலச் செய்திகள்" என்று ஒலி பரப்பிக்கொண்டு வருகிறது-செய்தியின் தொடக்கத்தில்தான் இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதே ஒழிய, செய்திகளுக்கிடையே தேவைப்படும்போது, "பிராந்தியம்" என்றுதான் இன்னமும் சொல்லிக் கொண்டு வருகிறது. இதைப் போலவே, வேறு பல தமிழ் அல்லாத சொற்களையும் வலிந்து புகுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு மாநில நிலயத்திற்கு இதுபோன்ற விரும்பத்தகாத ஒரு மொழிக் கொள்கை இருக்கக்கூடும் என்று நம்பமுடியவில்லை. நிலைய நிருவாகிகள் மட்டுமே நினைத்தால் மாற்றிக்கொள்ள முடிந்த இந்த விரும்பத்தகாத போக்கை, தமிழக மக்களின் விருப்பத்திற்குஎதிராக இன்னமும் கடைப் பிடிக்க நினைப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

தனித்திருந்தே கெடுப்பாரோ?

காமராசர், மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, இந்த நாட்டைக் கெடுத்தது நான் உட்பட, காங்கிரசுத் தலைவர்கள் தான் என்று பேசி இருக்கிறார். அதாவது கடந்த காலத்தில் நாடாண்ட காங்கிரசுக் கட்சி இந்த நாட்டு மக்களை வாழவைப்பதற்குப் பதிலாக, தாழச் செய்துவிட்டது என்பதுடன், மக்களையும் கெடுத்து விட்டது என்று ஒப்புக்கொண்டுப் பேசி இருக்கிறார். இதையும் பேசி விட்டு, இந்த நாட்டை வாழ வைக்கப் புதியதோர் இயக்கம் தொடங்கி இருப்பதாகவும் கூறுகிறார். தான் உட்பட இந்த நாட்டைக் கெடுத்தோம்—காங்கிரசின் பேரால் என்று கூறியவர், இனி தான் மட்டுமே தனியாக நாட்டைக் கெடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார் என்றுதானே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும்! மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமோ?

பெரியார் போராட்டம்!

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் விரைவில் ஒரு புதிய போராட்டத்தைத் தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிறார். அதாவது ஆண்டவனின் இருப்பிடம் என்று கூறப்படும் கோயில்களின் மூலஸ்தானங்களில், தமிழர்களும் சென்று நின்று வணங்குவது என்ற போராட்டம்! வணக்கம் செய்யப்படுகிறதா இல்லையா என்பது பிரச்னையில்லை, அனைவருக்கும் பொதுவான ஆண்டவன் சந்நிதியில், மூலவர் இருக்கும் மூலஸ்தானம் வரையில் பிராமணர் அல்லாதோர் செல்லக் கூடாது என்று, தடுக்கப்பட்டு வந்திருக்கின்றனர். சந்திரமண்டலத்துக்கேகூட மனிதன் போய்ச்சேர்ந்து விட்டபின், இதுபோன்ற தடைகள் வளர்ந்து வரும் நாகரிகத்துக்கு உகந்ததாயிருப்பதாகத் தெரியவில்லை. கோயில்களோ, கடவுளோ குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டுந்தான் சொந்தமென்ற கூச்சல், சுயநல நோக்கங்கொண்டது மட்டுமல்லாமல், மனித உரிமைகள் பற்றி வானளாவ குரல் எழுப்பப்படுகிற இந்தநேரத்தில், ஒரு இனத்தை, இன்னோர் இனத்தார் தாழ்வுபடுத்தும் குற்றத்தைப் புரிவதுமாகும். இதில் யாருடைய மனமும், புண்படக் காரணமில்லை, 'மனப் புண்' பற்றிப் பேசப்படுமானால், பாதிக்கப்படுவோரின் 'மனப் புண்' பற்றி, சட்டமே கூட தன் கடமையைச் செய்ய வேண்டி இருக்கும். அங்கே நாங்கள் மட்டுமே செல்வோம் என்று பிராமணர்களோ, குருக்கள்களோ தடைப்படுத்துவார்களானால் நாட்டில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டும் குற்றவாளிகளாகி விடுவார்கள். எனவே, பெரியாரது போராட்டம் தேவையில்லாத அளவுக்குப் புத்திசாலித்தனமாக, கோயில் மூலஸ்தானங்கள் அனைவருக்கும் இடந்தந்தே ஆகவேண்டும். தாங்களே மேதைகள் எனத் தருக்கித் திரிவோர், இதில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள்மேதைகள்தானா என்றுகூற முடியும்.

இதுதான் முறையென்றால்?...

நாட்டில் வன்முறைப் போக்குக்கு ஊக்கம் தரப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகவே, மத்திய அமைச்சர் சவானின் கார் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறது இந்தக்கிழமை. தாக்குதலுக்காளான காரில் ம.பி. கவர்னரும் முதலமைச்சரும், மத்திய உள்துறை அமைச்சர் சவான் ஆகிய மூவருமே இருந்திருக்கின்றனர். சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் போராட்டம் என்ற பேரால் இந்த கேடுகெட்ட செயல் நடத்தப்பட்டிருக்கிறது. அரசியல் முழக்கங்களை அமைச்சர்களின் காதுகளுக்கு எட்டச் செய்ய இவைபோன்ற முறைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதென்றால், நாடு என்ற ஒன்றும், அதில் மக்கள் என்போரும் இருக்கவே தேவை இல்லையே!

★

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை
மலர் 6 | 2—11—69 | இதழ் 16

மக்கள் நிர்க்கதியடைவர்?

கேரளாவில், கூட்டணி அமைச்சரவை பதவி விலக நேர்ந்துள்ள சம்பவம் மிகமிக வருந்தத்தக்கதாகும். நிஜலிங்கப்பா போன்ற ஜனநாயக விரோதச் சக்திகள்தான் இந்த நிலையினைக் கைதட்டி வரவேற்க முடியுமே ஒழிய, நாட்டின் பொதுநலனின் அக்கறை கொண்டோர் எவரும் உண்மையில் மனம் வருந்தவே செய்வர்.

திரு. நம்பூதிரிபாடு அவர்களது தலைமையிலான கூட்டணி அமைச்சரவை, கவிழ்வதற்கு, வலது கம்யூனிஸ்டுக் கட்சியும், மற்ற சில சில்லரைக் கட்சிகளுந்தான் முக்கிய காரணமாயிருந்தாலும், அந்தக் கட்சிகள் நிர்வாகத்திலிருந்தோர் மீது சுமத்தியுள்ள குற்றச் சாட்டுக்களைத் தள்ளிவிட முடியாது.

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் நிர்வாகத்தில் புகுந்து நடத்திய தர்பார்தான் இந்த விரும்பத்தகாத நிலைக்குக் காரணமென்றாலும், திரு. நம்பூதிரிபாடு விரும்பி இருந்தால், அமைச்சரவைக் காப்பாற்றி இருக்க முடியும். ஊழல், லஞ்சக் குற்றச்சாட்டுக்கு தொடக்கத்திலேயே விசாரணைக்கு ஏற்பாடுசெய்து, நிர்வாகத்தையும் தூய்மையுடைதாக இருக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவராயிருந்திருந்தால் இந்த அளவுக்கு அமளி ஏற்பட்டு, நம்பிக்கையின்மையின் பேரால் பதவி துறக்கும் அவலம் ஏற்பட்டிருக்காது என்றே நம்ப வேண்டியிருக்கிறது.

கட்சி அரசியல் மூலமே, நாட்டை ஆளமுடியும் என்று நமது அரசியல் சட்டம் கூறிக்கொண்டிருக்கிற நிலையில், ஏதோ ஒரு கட்சி, அல்லது பல கட்சிகள் கூடித்தான் ஆளும் பொறுப்பிலமரவேண்டிய நிர்ப்பந்தமும் நாட்டுக்கு உண்டு. இந்த நிலையில் ஆட்சியினை, முழுக்க முழுக்க கட்சியே ஆக்ரமித்துக்கொள்ள முடியும் என்றாலும், முழுவதுமாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டிய ஜனநாயகக் கடமையும் அரசியல் கட்சிகளுக்கு உண்டு.

இந்தக் கடமை மதிக்கப்படாததாலேயே கேரளா வீழ்ச்சியுற்றிருக்கிறது. கட்சி நலன் ஒன்றைமட்டுமே குறியாகக்கொண்டு, ஊழல், லஞ்சம் முதலான சுயலாப வேட்டைகளும் மலிந்துபோனால் எந்த ஆட்சியாயினும் கேரளாவைப்போன்று பரிதாபத்துக்குரிய தாவதினின்றும் தப்பமுடியாது. தவிர்க்க முடியாத தண்டனை இது.

தவறுகளுக்குரிய தண்டனையெனினும், தவறுகளைச் செய்ய காரணமாயிருந்தோர் ஜனநாயகச் சக்திகளே என்றறிய முடியும்போது வருத்தத்தின் கனம், அதிகமாகிவிடுகிறது. மக்களை மதிக்கக் கற்கவேண்டும்; மக்களே அனைத்துச் சக்தியும் என்றுணரவேண்டும். மக்கள்பேரால் முழக்கங்களை மட்டும் உற்பத்திச் செய்துகொண்டிருப்பது போதாது என்பதும் படிப்பினையாய்க் கொள்ளவேண்டும்.

காங்கரசின் பேரால் ஒரு பலமான ஏகாதிபத்தியத்துக்கும், சர்வாதிகார நடைமுறைக்கும் திட்டங்கள் தீட்டி செயல்பட்டுக் கொண்டு வருகிற இந்த நேரத்தில், ஜனநாயகச் சக்திகள் தங்களுக்குள் முரண்பாடு கொண்டு ஜனநாயக அமைப்பையே அழிவுத் திசையில் திருப்பிவிட முனைவது எத்தகைய விபரீதங்களையெல்லாம் விளைக்கும் என்பதை இனியேனும் தொடர்புடையோர் சிந்தித்துச் செயல்பட்டால், எதிர்காலமாவது அமைதி நிரம்பியதாக, அறிவுபூர்வமாக செயல்படும் ஆற்றல் கொண்டதாக இருக்கும்.

கேரளாவின் எதிரொலி காரணமாக, மே. வங்கமும் இதே போன்ற நடைமுறைகள் காரணமாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது. படிப்பினையைக் கொண்டு களங்கம் துடைக்கப்பட்டு, நிருவாகம், நிருவாகமாக இயங்கும் வழி வகைகளைக் காணவும் மக்கள் நலன் ஒன்று மட்டுமே கட்சிகளின் பணி என்பதையும் எண்ணிச் செயல்படவேண்டும்.

காங்கிரசல்லாத ஆட்சிகளே இதுபோன்ற அவலத்துக்கு ஆட்பட்டால், எதிர்கால மக்கள் நிர்க்கதியாகவிடப்பட்டுப் போவர். இதனைத்தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும்!

தர்சன்சிங் பெருமன்

சண்டிகர் நகரை பஞ்சாபுடன்தான் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை அடிப்படையில் 74 நாட்கள் உண்ணா நோன்பிருந்து, அதன் காரணமாக தர்சன் சிங் பெருமன் என்ற 83 வயது சீக்கியத் தலைவர் இந்தக் கிழமை மரணமடைந்திருக்கிறார்.

இதைப் போன்றே, சண்டிகரை, அரியானாவுடன்தான் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருந்துகொண்டிருக்கிறது.

ஒரு நகருக்கு, இரு மாநிலத்திலும் கோரிக்கைகள் இருந்துகொண்டிருக்கும் ஒரு நிலைமையில் பெரிதும் உணர்ச்சிகளுக்கு இடங் கொடுப்பது கூடாது என்ற முடிவைத்தான் திரு. பெருமன் அவர்களது பிரிந்த ஆவி, நமக்கு உணர்த்துகிறது.

நேருவின் காலத்திலேயே இந்தக் கோரிக்கைகள் கிளப்பப்பட்டு, சமரச ஏற்பாடாகத்தான் டில்லிப் பிடிப்பில் சண்டிகரை வைத்துக்கொண்டு, இரு மாநிலங்களின் தலைநகராக சண்டிகர் இருக்க வழியேற்படுத்தி வைத்தார் நேரு.

பஞ்சாப், அரியானா ஆகிய இரு மாநிலங்களின் தலைவர்களும், மக்களும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டிய விவகாரத்தை, உயிர்ப்பலி கொடுக்கக் கூடிய விவகாரமாக்குவது வருந்தத்தக்கதாகும். அரசியல் பிரச்னைகளையெல்லாம் நிர்ப்பந்தத்தின் மூலம்தான் தீர்வுக்குக்கொண்டுவரவேண்டும் என்று நினைக்கின்ற போக்கும் வருந்தத்தக்கதாகும்.

அரசாங்கமும், ஒரு விவகாரம் இதுபோன்ற விரும்பத்தகாத போக்குகளையும் வன்முறைகளையும் தோற்றுவிக்கிற வரையில் மிக மந்தப் போக்குடன் செயல்படுவது கண்டிக்கக் கூடியதாகும். விவகார மொன்றில் ஒரு தீர்வு காணும்போது எல்லாத் தரப்பினரையும் சமாதானப்படுத்த முயல்வது விரும்பக்கூடியதே யானாலும், நடைமுறைக்கு இயலாததாகும்.

திரு. தர்சன் சிங் பெருமன் அவர்களது ஆவி, ஆள்வோருக்கு இந்த அறிவுரையை உணருமாறு செய்யுமானால்தான், எதிர்காலம் பிழைக்கும்.

ஆ. சேக்கிழார் தொண்டைமான்

பி.வீ. ஆனந்தன். [1] 3.11.1969

"வேங்கையை கண்டால் பயமிருக்காதோ?"

"வேலிருக்கும்போது!"

"சிறுத்தை சீறுமாமே?"

"ஆமாம்; சிரித்துக்கொண்டே அதைத் துரத்திப் பிடிப்பேன்!"

"கண்ணாளா! காட்டிலே நாட்டிலுள்ளோருக்கு என்ன வேலை? ஏன் இந்த வேட்டை? மன்னன் மன மகிழ மதுர கீதம் கேட்கலாம்; நடனம் காணலாம்; மிருக வேட்டையாடி ஆபத்தை அணைத்துக் கொள்வதிலே ஓர் ஆனந்தமா?"

"வீரருக்கு வேட்டை வெண்ணிலாச் சோறு! வெஞ்சமரே விருந்து! தோட்டத்துப் பூவைத்தொட்டுப் பறித்துக் கொண்டையில் செருகும் கோதையர் களிப்பது போல், வேலால் வேங்கையைக் குத்திக் கொன்று, அதன் தோலையும் நகத்தையும் எடுத்து வரும்போது எமக்குக் களிப்பு."

"ஆபத்தான விளையாட்டு."

"அஞ்சாதே அஞ்சுகமே! வீரரின் ஆரம்பப்பள்ளி அதுதான்."

"எனக்கென்னமோ நீங்கள் எவ்வளவு சொன்ன போதிலும் நெஞ்சிலே துடிப்பு இருக்கிறது."

"சிற்றிடையே! சோகிக்காதே. சுந்தர முகத்தின் சோபிதம் சிதைகிறது. உன் புன்னகையை எனக்குத் தா. நான் புறப்பட வேண்டும்."

"புன்னகை போதுமா?"

"வள்ளல் நீர். கேட்டதற்கு மேலும் தருவர். தேவி! நீ உன் பக்தனுக்கு வரந்தர மறுப்பாயா?"

"எவ்வளவு சமர்த்தான பேச்சு! சரசத்தில் நீரே முதல் பரிசு பெறுவீர்."

"உண்மை! உன்னைப் பெறும் என்னை, ஊரார் அங்ஙனமே கருதுகின்றனர்."

"பூங்காவில் இவ்விதம் பேசி மகிழ்வதை விட்டுப், 'புறப்படுகிறேன் புலிவேட்டைக்கு' என்று கூறுகிறீரே? நெஞ்சிரக்க மற்றவரே! கொஞ்சுவதை விடும்."

"வஞ்சி! வதைக்காதே. நேரமாகிறது. நினைப்பிலே ஏதேதோ ஊறுகிறது."

"ஊறும், ஊறும். ஊஹூம். அது முடியாது. நடவாது, கூடாது. என்ன துணிச்சல்! என்ன ஆசை! எவ்வளவு ஆனந்தம்!"

"அணுச் சஞ்சலமேனும் இல்லாத இடம்!"

"கீதமா?"

"யாழின் நரம்புகள் தடவப்பட்டபின், இசை எழாதோ!"

"அரச அவையிலே புலவராக அமரலாம் நீர்!"

"வேண்டாமம்மா! புலவர்கள் தொழில் கெட்டே விட்டது. முன்பு நம் நாட்டுப் புலவர்கள், ஓடும் அருவி, பாடும் குயில், ஆடுகின்ற மயில், துள்ளும் மான், மலர்ச் சோலை, மாது உள்ளம் முதலியனபற்றிப் பாடி மகிழ்வித்தனர். இப்போதோ, மச்சாவதாரமாம்,

மீயல் காதையாம், ஏதோ கதைகளையன்றோ கூறி வாழ்கின்றனர்; அந்த வேலை எனக்கு ஏன்?

"நாதா! நீர் என்ன, அவைகளை நம்பவில்லையா? நமது மன்னர்கள், அந்தக் கதைகளைக் கடவுள் அருள் பெறக் கேட்கின்றனரே! காடுமுழுவதும் நம்புகிறதே, உமக்கு அது பிடிக்கவில்லையோ?

"காதுக்கு இனிய கற்பனை என்று, புரட்டரின் புன்மொழிகளுக்கு நம் நாடு இடந் தந்துவிட்டது. குயிலி! அதை எண்ணுகையில் நெஞ்சங் குமுறுகிறது. நாட்டவரின் நாட்டம் இப்போது மண்ணில் இல்லையே, விண்ணிலன்றோ சென்றுளது."

"உண்மை! அங்குதானே, தேவர் வாழ்கின்றனர்; மூவர் உறைகின்றனர்!"

"தேவரும். மூவரும் தேன்பூசிய நஞ்சு! விண், ஒரு வெளி! ஆங்கு உலகம் கற்பிப்பவன் ஓர் சூதுக்காரன். அதை நம்புகிறவன் ஏமாளி!"

"எது எப்படியோ கிடக்கட்டும் என் துரையே! எனக்குத், தேவரும் மூவரும் நீரே!"

"வானமுதம் நீ!"

"பார்த்தீர்களா! நீரே இப்போதுத் தேவாமிருதம் என்று, அந்தக் கதையை நம்பித்தானே கூறுகிறீர்?"

"நம்பிக்கையல்ல! என் நரம்பிலும் அந்த விஷம் மெள்ள மெள்ளப் பரவிவருகிறது. அதினின்றும் நமமவரில் தப்பினோர் மிகச் சிலரே. இனி வருங்காலத்திலே இந்த நஞ்சு; நந்தமிழ்நாட்டை என்ன பாடுபடுத்துமோ அறியேன். அன்று நம்மவர் வாழ்ந்ததற்கும் இன்று நாம் இருப்பதற்கும் வித்தியாசம் அதிகமாகத்தான் இருக்கிறது, எங்கிருந்தோ இங்கு குடிபுகுந்து போரிடவோ, பாடுபடவோ இசையாது பொய்யுரையை மெய்யென்றுரைத்து வாழும் ஆரியருக்கு, அரச அவையிலே இடங் கிடைத்துவிட்டது. மன்னன் எவ்வழியோ அவ்வழியே மக்களும்!"

"பாவம்! ஆரியர்கள் என்ன செய்கிருர்கள்? ஏதோ வேள்வி என்றும் வேதமென்றும் கூறிக்கொண்டுள்ளனர். பசுபோல் இருக்கின்றனர். படை எனில் பயந்தோடுகின்றனர். நாம் இடும் பிச்சையை இச்சையுடன் ஏற்று, கொச்சைத் தமிழ் பேசி, ஊரிலே ஓர் புறத்தில் ஒதுங்கி வாழ்கின்றனர். எங்கோ உள்ள தமது தேவனைத் தொழுது உடல் இளைத்து உழல்கின்றனர், நம்மை என்ன செய்கின்றனர்?"

"நம்மை ஒன்றும் செய்ய முடியவில்லை! மனமிருக்கிறது மார்க்கம் இன்னமும் கிடைக்கவில்லை. நாட்டிலே வீரருக்கே இன்னமும் இடமிருக்கிறது. நாட்கள் பல போயினபின், நம்மவர் நிலை யாதாகுமோ அறியேன். புலி எலியாகுமோ? தமிழர் தாசராவரோ என்றும் நான் அஞ்சுகிறேன்."

"வீண் பீதி! ஆரியர் ஏதும் செய்யார். நாதா! காதலருக்குத் தூதுவராக இருந்து, இருதய கீதத்தை ஒலிக்கச் செய்கின்றனர். அவர்களின்மீது ஏனோ உமக்கு வீணான ஓர் வெறுப்பு!"

"கண்ணே! கவலைதரும் பேச்சை விடுவோம். காலம் கழிந்து செல்கிறது. நான் போகுமுன் கனிரசம் பருகினால் என் களைப்பு தீராதோ! இப்படி துடியிடை ஆவளத் துள்ளாதே மானே! விடமாட்டேன்! இந்த மானைப் பிடிக்காவிட்டால், மதம் பிடித்த யானையையும் மடுவிலே மறையும் புலியையும் வேட்டையாட முடியுமோ? நில்! ஓடாதே!!"

"அதோ, காலடிச் சத்தம். ஆமாம்! அரசிளங்குமரிதான். சுந்தரிதேவியின் சதங்கை ஒலிதான் அது. போய் வாரும் கண்ணாளா! ஜாக்கிரதையாக வேட்டையாடும். மான் வேட்டையல்ல, மங்கையர் வேட்டையுமல்ல. புலி, கரடி, காட்டுப்பன்றி முதலிய துஷ்ட மிருகங்கள் உலவும் காடு."

"இளைய ராணியாரின் குரலா கேட்கிறது?"

"ஆமாம்! அரசிளங்குமரி அம்மங்கையின் குரல் தான்!"

"பூங்காவிலே நம்மைக் கண்டுவிட்டால்?"

"நாம் இதுவரை அரசிளங்குமரியின் கண்களில் படவில்லை. ஆனால் காதுக்கு விஷயம் எட்டித்தான் இருக்கிறது!"

"யார்;சொல்லிவிட்டார்கள்?"

"சொல்லுவானேன்? என் கண்களின் மொழியை அவள் அறியாது போகமுடியுமா? அம் மங்கையும், ஒரு பெண்தானே! அதோ கூப்பிடுகிருர்கள், என்னைத்தான். பூக்குடலை எங்கே? கொடுங்கள் இப்படி! இதோ வந்தேனம்மா! வந்துவிட்டேன்! போதும், இது இருபத்தி ஏழாவது முத்தம்! போதும், காலடிச் சத்தம் கனமாகிவிட்டது; விடும். புறப்படும்."

"மற்றதைப் பிறகு மறவாதே. நான் வருகிறேன் தஞ்சமடைந்தவனைத் தள்ளமாட்டாய் என்று என் நெஞ்சு உரைக்கிறது."

"சரி! சரி! வேட்டை முடிந்ததும் விரைந்து வாரீர்; மாலை தொடுத்துவைப்பேன்."

"மதியே மறவாதே, நான் வருகிறேன்."

• • •

குலோத்துங்கச்சோழன் அரண்மனைப் பூங்காவிலே நடந்த காதற்காட்சி, நாம் மேலே தீட்டியது. அந்தப் புரத்திலே, அரசிளங்குமாரி அம்மங்கைத்தேவியின் ஆருயிர் போன்றிருந்த தோழி, தன் காதலனைக் காண, பூங்கா புகுந்தாள். அவளுக்காக மாமரத்தடியிலே காத்துக்கிடந்த வீரன், தென்றல் கண்டவன் போல், தாவிக் குதித்தெழுந்து தையலை ஆரத் தழுவினான். கையிலிருந்த பூக்குடலை தரையில் விழ, கூந்தல் சரிய கோதை குதூகலமாகத்தன் காதலனைக் கட்டித் தழுவிக்கொண்டாள். அவர்கள் களப்பிய 'இச்' சொலி கேட்ட பறவைகள், மரக்கிளைவிட்டு மற்றோர் கிளைக்குத் தாவின.

வானம் துல்லிய நிறத்தோடு விளங்கிற்று. கதிரோன் ஒளிப் பிழம்பாக மட்டுமே இருந்தான். வெப்பத்தை வீசும் வேளை பிறக்கவில்லை. காலை மலர்ந்து மாந்தர் கண் மலர்ந்த நேரம். மாலை மலரும் காதல் அரும்பாகி இருந்தது எனினும், அன்று அவனுக்குக் காலையிலேயே மலர்ந்துவிட்டது. மாலையில் அவன் வீடு திரும்ப நெடுநேரம் பிடிக்கும், வேட்டைக்குச் செல்கிறன் அன்று! வேட்டைக்குப் புறப்படுமுன், வேல்விழியாளைக் கண்டு, விருந்துண்டுபோக மனம் தூண்டியது. கால்கள் வேலிகளையும் முட்தரையையும் தாண்டின. கள்ளத்தனமாக உள்ளே நுழைந்தான். காவலன் காணவில்லை என்பது அவன் நினைப்பு.

காவலனுக்குக் கண்ணுமுண்டு. கருத்துமுண்டு!

எனவே காதலர் கூடிப் பேசுவதைக் கண்டுங் காணுதவன் போல் பலமுறை இருந்ததுபோல், அன்றும் இருந்தான். மேலும், அந்த வஞ்சி அரசிளங்குமரியின் ஆருயிர்த்தோழி குணவதி. கோலமயில் சாயலும், கிளிமொழியும் கனக நிறமும், கருணை உள்ளமும் பெற்ற பண்பினள். அவளது காதலன் வீரர்க்கோர் திலகம். மன்னன் குலோத்துங்கனின் குதிரைப் படைத் தலைவருள் ஒருவன். வீரத்தாலேயே, இளம் பருவத்திலேயே அந்த உயர் நிலை பெறமுடிந்தது. தொண்டைமானிடமிருந்து 'தோடா' பரிசு பெற்றவன் அவன் ஒருவன். எனவே இவ்விருவரும் சந்தித்துப்பேச, மன்னனின் பூங்காவை மன்றமாக்கிக்கொண்டது கண்டு காவற்காரன் களித்தானேயன்றிக் கோபித்தானில்லை.

அவர்கள் சந்திக்கும்போது அவன் உலகமே காதல் மயமாக இருப்பதை எண்ணுவான்! குக்குக் கூவெனக் குயில் கூவி, காதற் கீதத்தை அள்ளி அள்ளி வீசுவதை நினைப்பான். நெடு நாட்களுக்கு முன்பு நீர் மொள்ள அருவிக்கு வரும் நீல நிறச்சேலைக்காரி வேலாயியைத் தான் கண்டதும் கனைத்ததும் அவள் முதலில் மிரண்டதும். பிறகு இணங்கியதும், ஆகிய பழைய காதல் நிகழ்ச்சியை எண்ணுவான், 'நரைத்தேன் இன்று. ஆனல் நானும் முன்னம் நாடினேன், பாடினேன் ஆடினேன் அணங்குக்காக'' என்று மனதில் எண்ணிக் கொள்வான். தோட்டத்து வாசலிலே நின்று யாரும் நுழையாதபடி பார்த்துக்கொள்ளும் தொழிலைவிட்டு. காதலரைக்காண யாரும் புகாதபடி காவலிருப்பான். இதனைக் காதலர் அறியார். அவர் தம்மையன்றி வேறெதைத்தான் அதுகாலை அறிதல் முடியும்!

அரசிளங்குமரியின் குரல் கேட்டு, அரைகுறையாயிற்று அன்று காதலர் விருந்து. விரைந்தோடிவந்த தோழியைக் கண்ட அம்மங்கை, கோபித்துக்கொண்டு, ''காலமும் அறியாய், இடமும் தெரியாய் கடமையையும் மறந்தாய்'' என்று கடிந்துரைத்தாள். தோழி தலை குனிந்து நின்ருள். பூக்குடலை காலியாகவே இருந்ததைக் கண்ட மற்றத் தோழியர், ''மனம் பறிக்கும் வேலையிலே மலர் பறிக்க மறந்தாள்'' என்று கூற அதுவரை கோபித்ததுபோல் பாவனை செய்த அரசிளங் குமரி [illegible] கிள்ளி, ''கதிரோன் வராவிட்டால் தாமரை மலராது என்பார்களே, அதுபோல் உன் அன்பன் வராவிட்டால் உன் முகம் மலருமோ! என்று கேலிசெய்தாள். தோழி அப்போதுதான் பயந்தெளிந்தாள். பயம் போனது நாணம் 'நான் உன்னை விடுவேனு?' என்றுரைத்துக் கொண்டே அவளைப் பிடித்துக்கொண்டது.

''வேட்டையாடக் காட்டுக்குப் போகக் கிளம்பியவன் இங்கே வந்தது ஏனடி?'' என்று அரசிளங்குமரி ஒரு தோழியைக் கேட்க, அவள் ''இவளைக்கண்டு மானென்று மயங்கி வந்தான் போலும்!'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''வேட்டைக்குக் கணைகள் வேண்டும்; இங்கும் கணைவிடு காட்சிதான் நடந்தது'' என்று கிண்டல் செய்தாள் அரசகுமாரி.

''ஆமாம் தேவி! சாதலுக்குச் செலுத்தும் கணைகள் காட்டிலே! காதலுக்குக் கணைகள் காட்டில் அல்லவே!'' என்ருள் குறும்புக்காரத் தோழி.

''ஆமாம்! காட்டில் அல்ல! நம் வீட்டுத் தோட்டத்தில்'' என்று கூறிக்கொண்டே. அம்மங்கை காதற் குற்றவாளியைக் கைப்பிடித்திழுத்துக் கரகரவெனச் சுற்றி ஆடினுள், களித்தாள். அம்மங்கையும் அதன் வயப்பட்டாளோ, என்று மற்றத்தோழியர் சந்தேகித்தனர்.''

யார் கண்டார்! யார் சாணவல்லார்! காதற் கணைகள் அம்மங்கையை மட்டும் விட்டுவிடுமோ! அதன் சக்தியின் முன்பு, பட்டத்தரசியாக வேண்டியவரும் தட்டுக்கெட்டுத் தடுமாறித்தானே தீருவர்! கண்டவர் அஞ்சிடக் கடும் போரில் தன்னிகரற்ற குலோத்துங்கனின் குமரியானுலும், குமரன் தோன்றிக் குறுநகை புரியின் குளிரும் விழியுடன் கொடியெனத் துவண்டு சாயத்தானே வேண்டும்!

''நடனராணி! கூச்சம் இப்போதிருந்து பயன் என்ன? வா, பந்தாடுவோம்'' என்று அரசிளங்குமரி கூறினுள். நடனராணி என்ற பெயரே நாம் குறிப்பிட்ட தோழியுடையது. நடனத்திலே மிக்கக் கீர்த்தி வாய்ந்தவள் நாட்டினர் அதுபற்றியே, நடனராணி என்று அவளை அழைத்தனர்.''

பந்தாடினர் பாவையர். நடனராணியை விட்டுப் பிரிந்த அவள் காதலன் வீரமணியின் மனம் படும்பாடு, அவர்களாடும் பந்தும் படாது என்னலாம். கிளியைக் கண்டால் அவள் மொழி நினைவு! குயிலைக் கண்டால் அவள் கீதக் கவனம்! மயிலைக் கண்டால் அவளது நடன நேர்த்தியின் கவனம் அவன் நெஞ்சில் ஊறும். பொல்லாத பறவைகள், சும்மாவும் இல்லை. ஜோடி ஜோடியாகப் பறப்பதும், உண்பதுமாக உல்லாசமாகவே இருந்தன.

ஊராள்வோன் உல்லாசத்துக்காக வேட்டைக்குக் கிளம்ப, வீரமணியும் உடன் சென்ருன்! வேட்டைக்காரர் கிளப்பிய பறையொலியும், ஊதுகுழலொலியும், குதிரைக் குளம்பொலியும், வீரர் முழக்கொலியும் கேட்டு பேடைக் குயிலும், மாடப் புருவும், கோல மயிலும், கொக்கும் வக்காவும் பயந்து அலறிப் பறந்தோடின! புதர்களிலே சலசல வெனச் சத்தம் கிளம்பிற்று. தொலைவிலே காட்டு மிருகங்கள் உறுமுவது கேட்டது. மோப்பம் பிடித்துச் செல்லும் நாய்கள், வாலை மடக்கி, தலையைக் குவித்து தரையை முகர்ந்தன! இடையிடையே புலி சென்ற அடையாளம் காணப்பட்டது,

வீரர்கள் இன்று நல்ல வேட்டை தான் என்று களித்தனர். மன்னன் குலோத்துங்கனும் வீரமணியும் மட்டுமே விசாரத்திலாழ்ந்திருந்தனர். வீரமணியின் விசாரம், காதலியிடம் சரசச் சமர் புரிவதை விட்டு சத்தற்ற வேட்டைக்கு வந்தோமே என்பதனால்! குலோத்துங்கனோ, பகை வேந்தர்களை வேட்டையாட சமயம் கிடைக்கவில்லையே, பயந்தோடும் மிருகங்களைத்தானே வேட்டையாட வேண்டி இருக்கிறது என்று கவலை கொண்டான். குலோத்துங்கச் சோழனின் வீரப்பிரதாபத்தை, வெஞ்சமர் பல நிரூபித்துவிட்டதால் வேந்தர் பலரும் விழியில் வேதனை தோன்றிட வாழ்ந்தனர். பறை ஒலி கேட்டு அன்று மிருகங்கள் பயந்தோடியும், பதுங்கிக் கொண்டதும் போலவே, பல மன்னர்கள் குலோத்துங்கனின் படை ஒலி கேட்டஞ்சிப் பயந்துப் பதுங்கினர். மன்னனின் படைத் தலைவன், மாவீரன் கருணாகரத் தொண்டைமான் "கண்டதுண்டமாக்கிக் கழுகுக்கிடுவேன் காயும் எதிரிகள் களத்திலே நிற்பின்" என்று முழங்கினான். எவரே எதிர்ப்படுவர்! உயிரிழக்க, அரசிழக்க எவரும் ஒருப்படாரன்றோ!

எனவே குறுநில மன்னரும் குலோத்துங்கனுக்கு அடங்கியே வாழ்ந்தனர்! தோள் தினவெடுத்தன. வேட்டை ஒரு சிறு பொழுது போக்காகுமென்றே மன்னன் புகுந்தான் காட்டிலே, தினவெடுக்கும் உள்ளத்தைத் திருத்தும் நிலைகாணு வீரமணி, மன்னன் பின் சென்றான். மனதை மங்கைபால் விட்டே வந்தான். வழி நடந்தான்.

இயற்கை எழில் செயற்கைப் பூச்சின்றி பூரித்துக் கிடக்கும் காட்டினுள்ளே, மன்னன் குலோத்துங்கன் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்காகப் புகுந்த காட்சியும், குதிரைமீதமர்ந்து பாய்ந்து சென்ற வீரர்களின் வருகை கண்ட துஷ்ட மிருகங்கள் மிரண்டோடினதும் கண்ட வீரமணிக்கு, குலோத்துங்கன், இளவரசாக இருந்தபோது, வட்நாடு சென்ற காலையில், சோழ நாட்டிலே சதிகாரர்கூடிக்கொண்டு குலோத்துங்கனுக்கென்று கங்கை கொண்ட சோழன் குறித்திருந்த மணிமுடியை, கங்கை கொண்ட சோழனுடைய மகன் அதிராசேந்திரனுக்குச் சூட்டியதும், அதுபோது சோழமண்டலமே காட்டு நிலை அடைந்ததும், பிறகு வாகை சூடி வடநாட்டிலிருந்து குலோத்துங்கன் திரும்பியதும் சதிகாரர் பதுங்கிக் கொண்டதுமான சம்பவமும், சமரும், காட்சியும் நினைவிற்கு ரவே புதர்களிலே மறையும் புலிக் குட்டிகளையும், மரப்பொந்துகளில் ஓடி ஒளியும் மந்திகளையும், வீறிட்டு அலறி ஓடும் வேங்கையையும், உறுமிக்கொண்டே ஓடும் காட்டுப் பன்றியையும், மிரண்டோடும்மான் கூட்டத்தையும் கண்டுகளித்தான்.

காட்டிலே கணைகள் சரமாரியாய்க் கிளம்பின.

ஆரவாரமும், ஆர்ப்பரிப்பும் பறை ஒலியும் பலவுமாகக் கலந்து காட்டிலே கலக்கத்தை உண்டாக்கிற்று. வேட்டை விருந்தை மன்னருக்குத் தந்த காடு, வனப்பு வாய்ந்தது. வேங்கை, குறிஞ்சி, தேக்கு, கமுகம், புன்னாகம் முதலிய மரங்கள் நிறைந்து காணப்பட்டன. உலர்ந்து காணப்பட்ட ஓமை மரங்களும், புகைந்து கிடந்த வீரை மரங்களும், காரைச் செடியும், சூரைச் செடியும் காண்போருக்கு இயற்கையின் விசித்திரத்தை விளக்கின.

சந்தன மரங்கள் ஓர்புறம், அதன்மீது தமது உடலை மோதி யானைகள் தேய்த்ததால் உண்டான மணம் 'கம்'மென்று கிளம்பிற்று. இண்டங்கொடிகள் இங்குமங்குமாகச் சுருண்டு கிடந்தன. மரத்தின் வேரோடு வேர்போல் மலைப் பாம்புகள் உண்ட அலுப்பு தீரப் புரண்டு கிடந்தன. வாகையும் கூகையும், மூங்கிலும் பிறவுமான பல விருட்சங்கள் விண் முட்டுவோம் என்றுரைப்பதுபோல் வளர்ந்து கிடந்தன. சிற்சில இடங்களிலே குலை குலுங்கும் வாழையும் காணப்பட்டன, வீரர்கள் தமது கணைகளை விட்டவே, கரிக் குருவியும் கானங் கோழியும், காடையும், கிள்ளையும், மயிலும் மாடப்புறாவும் உள்ளான், சிட்டு, கம்புள், குருகு, நாரை, குயில் முதலிய பறவைகள், பயந்து கூவி, பல்வேறு திசைகளிலே பறந்தன. பறக்கும்போது பலவித ஒலி கிளம்பியது புதியதோர் பண் போன்றிருந்தது. கானுறு ஒரு புறம், காட்டெருமைக் கூட்டம் மற்றோர்

புறம், யானை ஒரு புறம். புலி கரடி வேருேர் புறம். வீறுகொண்ட மரங்களிலிருந்து கிளைகளாண்டு சிறகை விரித்துப் பறந்தன பெரும் பறவைகள்!

குரங்குக் கூட்டம் கீச்செனக் கூவி, கிளை விட்டுக் கிளை தாவி, வீரரின் வாள் வேல் ஒலியால் கிலி கொண்டு குதித்தோடின. வால் சுழற்றின வேங்கைகள். குள்ளநரிகள் ஊளையிட்டன. முட்புதர்களைத் தாண்டிக்கொண்டு சிறுத்தைகள் சினந்தோடின, கருங்கற்களிலே, பிலங்கள் தேடின பாம்புகள்; இத்தகைய காட்சிகளைக்கண்டு களித்து, வில் வளைத்து, கணைகள் தொடுத்து, விரைந்தோடி வாள்கொண்டு தாக்கி, வேல் எறிந்து வேங்கையையும் வேழத்தையும் வீழ்த்தி, வீர விளையாட்டிலே ஒருநாள்பூராவும் கழித்தனர். மன்னரும்அவர்தம்பரிவாரமும், வேட்டையிலே கிடைத்த பொருள்களைச் சேகரித்து வீடு திரும்ப மன்னன் கட்டளை பிறக்குமென்று எண்ணிய வீரமணி பொழுது சாய்வதற்குள் ஊர் சென்ருல் மீண்டும் ஓர்முறை பூங்காவிலே நடனராணியைக் கண்டு களிக்கலாம், காட்டிலே கண்ட காட்சிகளை, வேட்டையாடிய செய்திகளைக் கூறிடலாம் என்று கருதினுன். மேலும் அவன் பக்குவமாக ஓர் பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்து வைத்திருந்தான். அதனை நடனராணிக்குத் தர விரும்பினுன். ஆனல் அவன் எண்ணியது ஈடேறவில்லை மன்னன் புதியதோர் கட்டளை பிறப்பித்தான், 'புறப்படு காஞ்சிக்கு' என்று கூறிவிட்டான். புரவிகள் காவேரிக்கரைக் காட்டைக் கடந்து கச்சி செல்ல விரைந்தன.

அன்று மாலை, அரசிளங்குமரி அம்மங்கையும், நடன ராணியும், மற்றும் சில தோழியரும், வழக்கம் போல் களித்தாடிக் கொண்டிருந்தனர். நடனராணியின் உள்ளம், காட்டிலே; கணைவிடும் காதலன்மீதே இருந்தது. பலவகை விளையாட்டுகளில் பாவையர் ஈடுபட்டனர். பரிவாரங்களுடன் காட்டுக் காட்சிகளையும், இடையே உள்ள நாட்டு மாட்சியையும் கண்டுகளித்து கச்சி போய்ச் சேருமுன்னம், மன்னன் வருகையை முன் கூட்டிக் கச்சிக்காவலனுக்குக் கூறிட, வீரமணியை விரைந்து முன்னுற் செல்லுமாறு மன்னன் கட்டளையிட்டான். மன்னன் மொழிக்கு மாற்று மொழி கூறல் எங்ஙனம் இயலும்? பஞ்சவர்ணக்கிளியை, தோழனொருவனிடம் தந்து, அதனைத் தன் காதலியிடம் தந்து, தான் கச்சி நகருக்குக் கடுகிச் செல்லுவதைக் கூறுமாறு வேண்டிக்கொண்டான். செவி மந்தமுள்ள அத்தோழன், யாரிடம் கிளியைத் தருவது என்பதைச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. "நான் மணம் செய்து கொள்ள இருக்கும் அம் மங்கையை நீ அறியாயோ?" என்று வீரமணி அவசரத்துடன் கேட்க, தோழன் "அம்மங்கையை அறியேனு!" என்று கூறிக்கொண்டே கிளியைப் பெற்றுக்கொண்டான், அவன் மன்னன் குமரி அம்மங்கைத் தேவியையே, வீரமணி குறிப்பிடுவதாகக் கருதினுன். அவனையே மன்னன் அழைத்து, 'ஏ! மருதா! விரைந்து நம் நகர் சென்று, ஏழிசை வல்லியாரைச் சேடியருடன் கச்சி வரச்சொல்லு; நாம் அங்கு, சின்னுட்கள் தங்க எண்ணியுள்ளோம்" என்று கூறிட, மருதன் தலைநகர் புறப்பட்டான்,

பஞ்சவர்ணக் கிளியோடு மருதன் உறையூர் நோக்கியும், கவலையுடன் வீரமணி கச்சி நோக்கியும் விரைகின்ற வேளையிலே மன்னன் குமரி அம்மங்கை தோழியருடன் பூங்காவிலே விளையாடிக்கொண்டிருந்தாள். பொழுது சாய்கிறது; போனவர் திரும்பக் காணுேமே என்று நடனராணி ஏக்கத்துடனேயே விளையாட்டில் விழியும், வீரமணியிடம் மனமும் செலுத்திக் கிடந்தாள்

இந்நாளே யாகட்டும்!

தமிழ்நாட்டி லிந்தியினுக் குரிமையினைத் தந்தே
தமிழரவர்க் கழிவதனைத் தேடியவம் மாக்கள்
அமிழ்ந்திட்டார் சேற்றுக்குள்; தமிழ்காப்போர் வந்தார்;
அலைக்குமொழிக் குழப்பத்தில் தீர்வுற்ரே மில்லை;
உமிழ்கின்ற நிலையெய்தி ஊனமிகப் பட்டே
உறுகின்ருர் எந்தமிழர் பிறநாட்டில் துன்பம்;
அமிழ்தான தமிழ்காக்க எழுந்திடுவீர் வடவர்
அழியட்டும் பகலோன்முன் வெண்பனியே போல!

துயராக்கும் வடவர்நெறி தனக்குண்டோ எல்லை?
தீராத நோயாயிற் றிந்நாட்டோர் தொல்லை!
உயர்வுற்ற தமிழ்நாட்டி னுரிமைச்செம் மொழிக்கே
உயிர்கொடுக்கத் தயங்காத காளையரே! உங்கள்
உயிரான தமிழதனை ஒழிக்கவொரு கூட்டம்
உம்முள்ளே உள்ளதெனத் தெளிந்திடுவீர்; மற்றீண்
டயர்வுறுத லுமக்கழகோ? புறப்படுவீர்! நும்மை
யாளவரு மிந்திமொழி யழியவகை செய்வீர்!

பாழ்பட்டு விட்டதமிழ் ஒளிரட்டும் நன்று;
பண்பற்றுப் போய்விட்ட இந்தியழி யட்டும்;
காழ்ப்புற்ற இந்திவெறி களையட்டும் வடவர்;
காட்டுமொழி இந்நாட்டுக் கேற்றமொழி யாமோ?
'வீழ்ந்திடுவோர் எமையெதிர்த்தோர்' — வரலாறு கூறும்;
வீணரவர் உணர்ந்திலதால் உணர்த்திடுவோ மின்று;
தாழ்வகற்றிச் செந்தமிழர் தனியாட்சி காண்போம்;
தன்மான வித்திட்டோம் தயங்காமல் காப்போம்!

நிலைகெட்டுக் கலைகெட்டு மனங்கெட்ட தமிழர்
நிமிரட்டும் புதுவாழ்வு தொடங்கட்டும்; வெற்றிக்
கலையாட்சி குறளாட்சி கவினுட்சி காணக்
கிளம்பட்டும் மறவர்படை கீழ்மையினைப் போக்கி
உலையிட்ட சோறுண்டே யுறங்கிடுதல் நன்ரோ?
உலைவுற்ற தமிழ்வாழ்வுக் கென்செய்தீர் நீவிர்?
விலையற்ற செந்தமி ழுக்கும்முயிரை ஈவீர்;
வீழ்வதுவும் ஓர்நாள்; அஃ திந்நாளே யாக!

— பொருநைத்துறைவன் —

மு. ஆறுமுகம், கள்ளக்குறிச்சி.

அறிவுடைமை என்பது என்ன?

"மழை பெய்தும் தமிழ் நாட்டுக்குவறட்சிநிதி! மத்தியஅரசு தூங்குகிறதா?" என்ற வினாவைப் போட்டு, தமிழகத்துக்கு மேலும் ஒரு கோடி கொடுக்கப்பட்ட நிவாரண நிதி பற்றிச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறதே அதுதான் அறிவுடைமை எனப்படுவது! இது போன்ற "பேரறிவு" இல்லையென்றால் நாடேது, நல்லோர் ஏது ஐயா!

தி. கருணாநந்தம், கோவை.

காங்கிரஸ் மேலிடத்துத் தகராறை டி. டி. கே.யால் தீர்த்து வைத்துவிட முடியுமா?

காந்தியடிகளோ, நேருவோ வந்தால் கூட 1972 பொதுத் தேர்தல் வரையில் யாராலும் தீர்க்க முடியாது. தீரப்போவது மில்லை. தேர்தலுக்குப் பிறகு தகராறுகள் எல்லாம் தானாகவே தீர்ந்துவிடும். அதுவரையில் தலைவலிக்கு மருந்தே இல்லை!

ஆர். முத்தெழிலன், சென்னை.

தமிழக முதலமைச்சர் சென்னை மழையின்போது ஒரு இடத்தில் 'முண்டாசு' கட்டிக்கொண்டிருந்ததைக் கண்டித்த காமராசர், கக்கனையும் கண்டிக்க வேண்டாமா?

காமராசரைப் பற்றி இப்படியெல்லாம் கேட்கலாமா? காமராசரிடம் காட்டப்பட்ட படங்களில் கலைஞர் மட்டும்தான் இருந்தார். கக்கன் 'முண்டாசு' கட்டிக்கொண்டு பவனி வந்த படங்களை யாரும் காட்டவில்லையே! காமராசரா பழி?

நிலவுசேகரன், கடையம்.

சந்திர மண்டலப் பயணம் எதற்காக மேற்கொள்ளப்பட்டதோ, அது ஏமாற்றத்துக்குரியது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகிறார்களாமே!

ஆமாம், நிலாத் தரையில் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்த்த சில 'பொருட்கள்' கிடைக்காது என்று மட்டும் நம்பவேண்டியிருக்கிறதாம். எனினும் புதிய பல நம்பிக்கைகளையும், உணர்வுகளையும் பெற அது வழி வகுக்கக்கூடும் என்று கருதத் தொடங்கியிருக்கிறார்கள்.

வினா-விடை

டி. டி. நரசிம்மன், தக்கோலம்.

'தக்கோலம்' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

இது தமிழ்ச் சொல்லா என்பது ஆராய்ச்சிக்குரியது. 'தக்கோலம்' என்றால் தாம்பூலம் என்ற பொருளை, 'நாலடி' நவில்கிறது.

எஸ். செல்லதுரை, சேலம்.

சேலம் உருக்காலைத் திட்டத்தை காங்கிரஸ்தான்கொண்டுவந்தது என்று ஒருவர் பேசி இருக்கிறாரே, உண்மையா?

உண்மைதான்! உருக்காலைத் திட்டத்தைப் போட்டு, மூலையில் முடக்கிவைத்துமிருந்தது காங்கிரஸ் கட்சிதான் என்பதை எதற்காக மறைக்க வேண்டும். ஆனால், சேலம் இரும்பு, காங்கிரஸ் திட்டத்துக்கு முன்பே 'சிறு ஆலை' வடிவில் இயங்கி, செத்துப் போயுமிருக்கிறது என்பதை காங்கிரஸ்காரர்கள் இப்போது மறந்து போயிருக்கக்கூடும்.

தென்னவன், தோவாளை.

கம்யூனிஸ்டுகள் உணவுப் போராட்டத்துக்கு நெல்லை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது எதற்கு?

அங்குள்ளவர்களுக்கு மட்டுந்தான் 'பசி' இருக்கிறது என்பதற்காக அல்ல! அருகே கேரளா இருக்கிறது என்பதற்காக! இடது சாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு யாகக்கூட அது இருந்தாலும் இருக்கலாமில்லையா?

தமிழ்ப்பித்தன், திருவாரூர்.

கருத்தடைத் திட்டத்துக்கு பிராமணர்களின் ஆதரவு இருக்கிறதா? யாராவது 'தடை' செய்து கொண்டிருக்கிறார்களா?

இடந்தவறிக் கேட்கப்பட்டுள்ள வினா இது.

கருப்பசாமி, மதுரை.

வேலை வாய்ப்புக்கள் குறைந்து போனதற்குக் காங்கிரசுக் கட்சிதான் காரணம் என்பதை காமராசர் ஒப்புக்கொண்டுவிட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அண்மையில் இதனை எடுத்துக் காட்டியிருப்பதனை, காமராசர் படித்துப் பார்த்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அதோடு, காங்கிரசைக் குற்றஞ் சாட்டிப் பேசித் தீரவேண்டிய ஒரு நெருக்கடியும் இப்போது அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

தில்லைவளவன், கருப்பஞ்சேரி.

'வடக்கு—தெற்கு' என்று பேசுவது 'குறுகிய புத்தி' என்ற காமராசர், இப்போது இப்படிதானே பேசத் தொடங்கி இருப்பது ஏன்?

இப்போதுதான் அந்த இரத்தத்தில் 'சூடு' ஏறி இருக்கிறதோ என்னவோ!

கே. தியாகராசன், சென்னை.

நாடு துண்டாகி விடக் கூடிய பேரபாயம் மீண்டும் ஏற்படுமா?

சட்டப்படி இப்போது இதற்குப் பதில் சொல்லக்கூடாது. 1972 வரையில் என்ன நடக்கிறது என்பதை மட்டும் கவனித்துக்கொண்டு வாருங்கள்!

எம். சுந்தரம், செங்கை.

கழக அரசு ஏதாவது தவறு செய்திருக்கிறது என்று கூறுவீர்களா?

ஏன் கூறக் கூடாது! ஆட்சியிலமர்ந்ததும், முன்னாளில் ஆண்டவர்கள் மீது ஒரு விசாரணை நடத்த உத்திரவிட்டிருந்தால், நாட்டில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சில குற்றங்களின் குற்றவாளிகளைக் கண்டு பிடித்திருக்க முடியுமே! கழக அரசு அப்படிச் செய்யாதது தவறுதானே!

★

பெரிய தலைவரின் சிறிய அரசியல்

—மலையமான்

தி. மு. க. அரசு எதைச் செய்தாலும், அதன் அமைச்சர்கள் எந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டாலும் அதற்கு ஏதாவது ஒரு தப்பெண்ணத்தைக் கற்பிக்கவேண்டும் என்ற அரிப்பிலேயே காங்கிரசார் பழந்தலைவர்கள் முதல் புதுத் தலைவர்கள் வரை அரசியல் பண்ணி விடுகிறார்கள்.

சத்தியமூர்த்தியின் வாதத்திறமையையும் பேச்சுத் திறமையையும் இன்றைக்கு நினைத்தால்கூட நெஞ்சம் புல்லரிக்கும். எடுத்துக்கொண்ட கருத்துக்கேற்ப தன் பேச்சையும் வாதத்தையும் நிலை நாட்டுவதிலே வல்லவர் என்று பெயர் பெற்ற அந்த சத்தியமூர்த்தியின் சீடர் என்று தம்மைக் கருதிக் கொள்வதிலே பெருமைப்படுபவர் இன்றைக்குக் காங்கிரசுக்கு வந்தவர்களால் 'பெருந்தலைவர்' என அழைக்கப்படும் திரு. காமராசர்.

அவருடைய பேச்சைப்பற்றி நாம் சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய நிலையிலே நாடு இல்லை; என்றாலும் காங்கிரஸ் நண்பர்களும் அவருடைய தயவிலே நடக்கும் ஏடுகளும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் திருவாளர் காமராசர் அண்மையில் பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சை இங்கே விளக்க விரும்புகிறோம். அதை

"வழக்குப் போட்டு மிரட்ட முடியாது"

தி. மு. க. அரசுக்குத் தலைவர் காமராஜர் கடும் எச்சரிக்கை என்ற தலைப்போடு ஒரு காங்கிரஸ் ஏடு வெளியிட்டிருக்கிறது. அந்தப் பேச்சில் "நானுந்தான் முதலமைச்சராய் இருந்திருக்கிறேன். அப்போது இலவசமாகக்கல்வி, உணவு உடை என்று கொடுத்தோம்" என்கிறார் காமராசர். இப்போது என்ன காசுக்கா தி. மு. க. அரசு கல்வியைப் பள்ளிகளில் அளித்து வருகிறது? அவர் "எல்லாம் இந்த இரண்டரை வருடத்தில்தான் கெட்டுவிட்டது" என்கிறார். எல்லாம் என்றால் 'காமராசரின் சிந்தனையுமா" என்று கேட்கத்தோன்றுகிறதல்லவா? ஆனால் பாவம் அவர் பெருந்தலைவராகிவரும் இந்த நேரத்தில் இப்படியெல்லாம் கேட்கக் கூடாது என்றெண்ணிக்கொள்வோம். பெருந்தலைவராகி வருகிற காரணத்தால் தி. மு. க அரசில் எது எது கெட்டுவிட்டது என்று விளக்கிச் சொல்ல நேரமில்லையாகையால் ஒரே வாக்கியத்தில் இரத்தினச் சுருக்கமாக 'இந்த இரண்டரை வருடத்தில் எல்லாம் கெட்டுவிட்டது' என்று பெரும்போடாகப் போட்டுவிட்டார்.

மதுவிலக்கைக் கேள்விக் குறியாக்கி மத்திய அரசிடமிருந்து தமிழக முதல்வர் பணம் வாங்க முயல்கிறாராம். அதுபற்றியும் பெருந்தலைவர் தம்முடைய பேச்சில் குறிப்பிடுகிறார். "வாங்கட்டுமே டில்லியும் கொடுக்கட்டுமே. கொடுக்கக் கூடாது என்றோ வாங்கக் கூடாது என்றோ சொல்லவில்லையே நாம். ஆனால் அப்படிவாங்குகிற பணத்தை நல்ல வழியில் செலவு பண்ண வேண்டும்" — என்று அறிவுரை வழங்கியிருக்கிறார். பணம் கேட்பதே மதுவிலக்கை நீடித்துக்கொண்டிருப்பதற்குத்தானே—அதில் வரும் குறையை நிறைவு செய்யத்தானே. அப்படியானால் மதுவிலக்கை நல்ல காரியம் என்று திருவாளர் காமராசர் கருதிக் கொள்ளவில்லையா? மதுவிலக்கு என்கிற நல்ல காரியத்தில் வரும் நட்டத்துக்குத்தான் பணம் என்று விளக்க வேண்டியிருக்கிறதே இத்தனைப் பெருந்தலைவருக்கு!

அதே பெரம்பூர் பொதுக்கூட்டத்தில் பெருந்தலைவர் நம் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களும் மற்ற கழக முன்னணியினரும் அண்மையில் மழையினால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்கள் வாழ்கிற—இடங்களுக்குச் சென்றிருந்ததைப் பற்றியும் பேசியிருக்கிறார். "இத்தனைப்பெருந்தலைவர் இத்தனைச் சிறிய அரசியல் பேசுகிறார்"—என்று காங்கிரசில் உள்ள சிறு தொண்டனும் வெட்கித் தலைகுனிவான். "எங்குமழை வருகிறதோ அங்குதலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டு போகலாம்... என்றிருந்தால்.... அவர்களது ஏழ்மை நிலைபோகாது" "தலையில் துண்டுகட்டிக் கொள்வதாலோ 'சூட்'அணிந்து கொள்வதாலோஏழைகள்வாழ்வுசிறக்காது"

தலையில் துண்டு கட்டிக் கொள்வதாலும் 'சூட்' அணிந்து கொள்வதாலும் ஏழ்மை இந்த நாட்டை விட்டுப் போய்விடும் என்று இவரிடத்திலே யார் சொன்னார்கள்?

பத்திரிகையில் வரும் படங்களை மட்டும் பார்த்துவிட்டுக் காமராசர் அரசியல் பேசுவார் என்று யாராவது நம்ப முடியுமா? அண்மையில் நம் தமிழக முதலமைச்சர் 'சூட்' அணிந்து கொண்டு ஒரு நிகழ்ச்சியிலும் தலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டு ஒருநிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதாகப் பத்திரிகைகள் படங்கள் வெளியிட்டதைக் காமராசர் பார்த்திருக்கிறார். பத்திரிகையில் வரும் படத்தை மட்டும்தான் பார்ப்பார் போலிருக்கிறது செய்திகளை—வெளியிடும் கருத்துக்களை ஊன்றிக் கவனிக்க நேரமிருந்திருக்காது—பெருந்தலைவரல்லவா?

மழை, வெள்ளமும் புயலும் வீசி ஏழை எளியவர்களைப் பாதிக்கும் போது கோட்டை போன்ற வீட்டுக்குள்ளே முதலமைச்சர் புகுந்து கொண்டில்லை; நிவாரணத்துக்கு ஏழை எளியவர்கள் முதலமைச்சரின் இல்லத்தைத் தேடி—அவர் பேட்டிக்குக் காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏழை எளிய குடிசை மக்களின் துன்பத்தைப் போக்க முடியாவிட்டாலும், துயரத்திலே பங்குகொள்ளவாவது இப்போதைய முதலமைச்சர்மழையால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருகிறார், அவரால் அவர்களது ஏழ்மையை முழுக்க முழுக்க விரட்ட முடியவில்லை என்றாலும் தற்காலிக நிவாரணம் தரவாவது தானே ஓடுகிறார். அழைத்தாலும் வராத 'அராஜக' மனப்போக்கினர் அல்ல அவர் என்பதையாவது அவரால் இந்த மக்களுக்கு உணர்த்த முடிந்தது. இதாவது முடிந்ததா திரு. பக்தவச்சலம் போன்றவர்க்கு? போலீசார் இல்லாமல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதுண்டா? பேட்டி காணமுடியாது என்ற பிடிவாதத்தால் விளைந்த மாணவர் கிளர்ச்சியை மறந்தாபோய் விட்டோம்? இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும் ஏழைகளை உயர்த்த விரும்பும் காமராசர்;

எளிமையை விரும்பும் பெருந் தலைவர். எண்ணிப் பார்த்திருந்தால், போகிற இடத்தில் மழை நீர் கணுக் காலளவுக்கு மேல் இருக்கும் இடத்தில் வேட்டியை மடித்துக் கட்டிக் கொள்வதையும், ஒரு குளத்துக்குத் தூர் வாரும் நிகழ்ச்சியில் மேல் துண்டை முண்டாசுக் கட்டிக் கொண்டதையும் ஒரு மாபெரும் அரசியல் குற்றம் என்று பேசியிருக்க மாட்டார் திரு காமராசர். ஆனால் பாவம், பெருந் தலைவரான பிறகு இதை எல்லாம் எண்ணிப் பார்க்க அவருக்கு ஏது நேரம்?

வழக்குப் போட்டு மிரட்ட முடியாது என்றவர் வேறொரு வெடிகுண்டையும் வீசியிருக்கிறார். கேரளா அரசாங்கம் லஞ்ச ஊழல் குற்றத்தால் வீழ்ந்தது. "இங்கும் (தமிழ் நாட்டில்) அவர் ஓட்டல் வாங்கினார். இவர் வீடுகள் வாங்கினார் என்று கூறுகிறார்கள். அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது."

எங்களை மிரட்ட முடியாது என்று பேசுகிறவர் "அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது", என்று இடம் விட்டுக் கொடுத்து ஒருபுறமாக ஒதுங்குகிறார். ஏன்? மிரளாதவர் பேசும் பேச்சா இது? பொறுப்புள்ள அரசியல்வாதி பேசக் கூடிய பேச்சா இது?

கேரளாவிலே சொன்னார்கள். ஆம். சொல்லவேண்டிய இடத்தில் சொல்ல வெண்டியதைச் சொல்லுவதற்கு வேண்டிய ஆதாரத்தோடும் தைரியத்தோடும் சொன்னார்கள். நீங்களும் அப்படிச் சொல்லவேண்டிய இடத்திலே திடமாக தக்க ஆதாரங்களுடன் சொல்லுங்கள் — சொன்னால் அப்போது நடக்கவேண்டியது நடக்கும். தைரியமிருக்கிறதா? பாவம் அதுதான் திரு. மகாலிங்கத்தின் வக்கீலிடம் அடகு வைக்கப் பட்டிருக்கிறதே!

தைரியமில்லாமல் இப்படிப் பெருந் தலைவர்கள் அரசியலில் ஏனோ தானோ வென்று பேசுவது நல்லதல்ல என்று மட்டும் சொல்லி வைக்கிறோம். தைரியமின்றிப் பட்டாசு கொளுத்த விரும்பும் சிறுவனை நினைவூட்டுகிறது, காமராசர் பேச்சு, வேண்டாம், பட்டாசு கையிலேயே வெடித்துக் கைக்கோ, முகத்துக்கோ கூட சேதம் தரும். அதுவும் காமராசர் போன்ற 'பெரியவர்கள்' பட்டாசு கொளுத்தலாமா? ★

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் அக்டோபர் மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது, விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3.

உரைகல்

நூல்: முல்லை மாடம்
ஆசிரியர்: ஐசக் அருமைராசன், எம். ஏ.,
பக்கங்கள்: 214 விலை ரூ. 4-00
கிடைக்குமிடம்:
390, இராமவர்மபுரம், நாகர்கோவில், குமரிமாவட்டம்.

'மனோன்மணீ'யத்தைப் பின்பற்றி எழுந்த முழுநீளக் கவிதை நாடகம், முல்லை மாடம். ஆசிரியர் ஐசக் அருமைராசன், எம். ஏ., அவர்கள் சிறந்த முறையில் இக்கவிதை நாடகத்தை ஆக்கித்தந்துள்ளார்.

ஐந்து அங்கங்களோடு இருபத்தொன்பது களங்களைத் தன்பால் கொண்டு ஆசிரியப்பாவால் நாடகத் தமிழ் இலக்கணங்கள் அமைய இயற்றப்பட்டது இந்நூல்.

கல்கியின் 'பொன்னியின் செல்வனில்' வரும் 'நந்தினி'யின் மறுபிறவியாக 'முல்லை மாடத்'தில் 'காமக் கண்ணி' படைக்கப்பட்டிருக்கிறாள். கணவன் குட்டுவன் கோதையைக் கொன்ற மதுரை மன்னன் மாறன் வழுதியைப் பழிக்குப்பழி வாங்குகிறாள். காமக்கண்ணி — திலகை உரையாடலில் கற்பின் திறம் சிறப்பிடம் பெறுவதைக் காணலாம்.

அண்ணன் குட்டுவன் கோதையின் கோர முடிவைக் கேள்வியுற்று "அண்ணா! செந்தமிழ் அரசே சென்றனையோ?" எனப் புலம்புகின்றான் அன்புத்தம்பி வானவரம்டன். பார் புகழ் குட்டுவனைப் பாடுதற்கு எண்ணிய பாசமுள்ள தம்பியின் கவிதைப் பாமாலை கற்போர் நெஞ்சினைக் கவரும் என்பதில் ஐயமில்லை

"...அண்ணன் தமிழை அமரர்க்கும் ஈகின்றான்
அன்னானுக் குண்டோ இணை!"

"அண்ணனைக் கண்டோம்
அருந்தமிழ்க் காவலனாய்
......என்றைக்குக் காண்போம்
இனி?"

"அன்பிலை தம்பியும்
அண்ணன் சொற்கேட்டதுண்டு
அன்பொரு பண்புமுண்டு
அண்ணன்பால், கிள்ளையே!
அண்ணனை வென்றிடும்
அன்புடையார் அன்றிவேறு
பண்புடையார் உண்டோ புகல்"

என்று அண்ணன் குட்டுவனின் புகழ்பாடும் வானவரம்பனின் துயரம் இலட்சோப இலட்சம் தம்பிகளின் இதயம் படும் வேதனையின் எதிரொலியாக 'முல்லை மாடத்'தில் இடம் பெற்றுள்ளதோ, என்னவோ? மூன்று வெண்பாக்களும் முத்துக்கள்.

திருக்குறள் கருத்துக்கள், தமிழகத்துப் பழமொழிகள் எடுத்தாளப் பட்டுள்ளன. தாய்மொழிப் பற்றினையும்செவ்வனேபுலப்படுத்தியுள்ளார். தமிழை அழிக்க நினைக்கும் வடபுல வேந்தனின் தம்பி "சுரபி"க்கு அம்பினைப் பரிசாகக் கொடுத்து,

"தமிழை யழிக்க—நீ
தருணம் பார்த்துத் தாக்கின்
இமிழ்கடல் பரப்பு—மேலே
முழுதும் சிவந்திடும்அறிவாய்!"

என்று வானவரம்பன் வீரர்கள் எச்சரிக்கை விடுக்கும் எழுச்சிக் குரலில் ஆசிரியரின் இதயக் குரலையும் கேட்கலாம்.

எளிய நடை; இனிய போக்கு; நல்ல நாடக அமைப்பு, — முல்லை மாடம்! சிறு குறைகளும் அடுத்த பதிப்பில் களையப்படும் என்று 'முன்னுரை' உறுதியளிக்கிறது. தமிழகம் இந்நூலினை ஏற்றுப் போற்றும் என்பதில் துளியும் ஐயமில்லை.

—மணிவேந்தன், எம். ஏ.

சோகக் குரல்

அண்ணா,
நாளெல்லாம் உழைக்கின்ற,
நைந்து உருகிச் சாகின்ற,
ஏழை மனக் கோயிலிலே,
என்றென்றும் குடியிருப்பீர்!
செங்கரும்புச் சாற்றுடனே,
செவ்வாழைச் சுவை கலந்து
கவியெழுதும் கவிஞனுக்கு
கருப் பொருளாய் விளங்கிடுவீர்!
முத்தான நெற்றி வேர்வை
சொட்டாகச் சிந்துகின்ற
உழவர்களின் நெஞ்சத்தில்
உறுதியினைத் தருபவர் நீ!
காலனே!
காலத்தைத் துரும்பாக மதிப்பவனே!
அண்ணாவை விட்டுவிடு;
பொன்னிப் புனல் பாயும்,
கன்னித் தமிழ் நாட்டில்
கலங்குகிற தமிழர்களின் வீட்டில்;
கலையாத வரலாற்று ஏட்டில்;
கறை படியச் செய்தவனே!
அண்ணாவை விட்டுவிடு!
எங்களது வாழ்வை
ஈட்டுக்குத் தருகின்றோம்;
எங்கள் இதயத்தைப் பிழிந்து விடு!
தொங்கும் நரம்பாலே மாலை
தொடுத்து விடு: செவ்வண்ணக்
குழம்பாக்கிக் குருதியினைக்
குடித்துவிடு; கவலையில்லை,
அண்ணாவை விட்டு விடு!
அண்ணனே!
முன்னேறும் தமிழினத்தின்
முயற்சிக்கு முதல் தரமா
இருந்தீரே அண்ணா!......இன்றோ,
"இதையும் தாங்குமா உங்கள்
இதயம்" என்று
சோகக் கடலில்
சோர்விழக்கச் செய்தீரே!
மூச்சுத் திணறுகிறோம்;
முடியவில்லை அண்ணா
முடியவில்லை!

—துரை. தண்டபாணி.

மேகம்

நீலமயில் தந்ததவள் ஆடை—மெள்ள
நீந்திவரும் பூம்படகின் மேடை—குளிர்
குலவி அலை புரட்டிக்
கொஞ்சிவருந் தென்றலுக்குத்—தோழி!
அவள் பேர்—ஆழி!!

கீழ்திசையில் காலையெழும் வட்டம்—கதிர்
கிறுகிறுத்து மேற்பறக்கும் பட்டம்—எழில்
வஞ்சிமயில் ஆழியினை
மஞ்சமெனக் கொண்டுவிட்ட—காளை!
முத்துப்—பேழை!!

ஆர்த்தெழுந்த கடல்மகளே யன்னை—முகில்
ஆதவனின் சீர்படைத்த பிள்ளை—செழும்
ஆயமகன் வேய்குழலை
ஆங்கொலிக்கும் குறிஞ்சியிடைத்—தொங்கும்!
வந்து—தங்கும்!!

பச்சைமலை உச்சியிலே மேகம்—வந்து
படிந்துவிட்டால் தீருமடி தாகம்!—எங்கும்
பச்சைமணித் தோரணங்கள்
பல்குநவ தானியங்கள்—பாராய்!
ஒன்று—சேராய்!!

—கு. க. பிறைகுடிப்பித்தன்.

குயிலாதல் என்றோ?

கொஞ்சு மொழிபேசி மஞ்சு குழல்சரிய
நெஞ்சு தடுமாறச் சிந்தை—மனம்
விஞ்சி நடைபோடும் விந்தை

உள்ள மலர்க்காவில் உறவு மலர்பூக்க
கள்ள விழிபோடும் மங்கை—அன்பு
அள்ளக் குறையாத கங்கை

தெங்கின் இளநீரால் நங்கை தடுமாறி
சிந்தை அழிக்கின்ற நேரம்—இடை
சேர்ந்து சுமக்கின்ற பாரம்

நெஞ்சம் நெகிழாமல் நினைவு மலராமல்
மஞ்சம் சுகந்தேடத் துடிக்கும்—மனம்
அஞ்சி நடைபோட்டு அடக்கும்

சித்தம் திருத்தாமல் நித்தம் நினையாமல்
முத்து நகையாளும் மறைவாள்—மனம்
பித்து நிலையாக்கித் திரிவாள்

பொங்கி அலையாமல் பொசுங்கி வீழாமல்
அங்கம் நிலையின்றிப் பதறும்—மனம்
அன்பு நினைத்திங்குச் சிதறும்

வில்லின் புருவத்தாள் மண்ணில் விழுந்திங்கு
நெல்லின் உமிபோலப் பிரிவாள்—சுகம்
புல்லின் பனியாகச் சொரிவாள்

மானின் விழியோடி மங்கை விரிந்தாடி
மேவும் மயிலாதல் என்றோ?—மனக்
கூவும் குயிலாதல் என்றோ?

—இர. நடராசன்.

காலமும் காமராசரும்!

அன்புள்ள நண்பா!

காலத்தை மிஞ்சக்கூடிய ஒரு கொடும்பாவி இருக்கக்கூடும் என்று ஒப்ப முடிகிறதா? வல்லாழி வாய்ந்த வடபுலத்திலேயே, இமயச் சிகரத்தை ஏற்படுத்தித் தந்ததாயிற்றே அது! காலம், எத்தனை எத்தனையோ அற்புதங்களைத் தோற்றுவித்திருக்கிறது; தோற்றுவித்துக்கொண்டும் வருகிறது! இன்னும் எவை எவற்றையெல்லாம் தோற்றுவிக்கப் போகிறதோ!

ஆண்டியை அரசனாக்கி இருக்கிறது! அரச குடும்பத்தை, கொடியும் படையும் இழந்த நிலையில் கோவெனக் கதறி, குடிமக்களுக்கிடையே வந்து "உணவு கொடு" எனக் கேட்கும் ஆண்டியாக்கியும் விட்டிருக்கிறது! உலோபியை வள்ளலாக்கி இருக்கிறது; வள்ளலை உலோபியாக்கி வைத்திருக்கிறது. மிருகங்களை மனிதர்களாக்கி உலவவிட்டிருக்கிறது; மனிதர்களையும் மிருகங்களைப் போன்று வாழவிட்டிருக்கிறது. இவையெல்லாம் என்ன விளையாட்டுக்களாக இருக்க முடியும்? ஆண்டவனின் விளையாட்டுக்கள் என்பன அப்படித்தானிருக்குமோ என்னவோ!

பரமண்டலப் பிதாவின் பாலவிளையாட்டுக்களையும் படிக்கிறோம்; பைந்தமிழ் நாட்டுப் பாவாணர் பாடிய பாடல்களையும் படிக்கிறோம். இதயத்தில் பெருமிதம் வந்து குடிபுகுந்துகொள்கிறது! மனித மிருகங்களைக் கூட மறந்துவிடக்கூடிய அளவுக்குப் பெருமிதம் சேர்கிறது!

நாலணா கொடுத்தால், நாளெல்லாம் நத்திக் கிடந்து நக்கிக் குடிக்கும் மனிதர்கள் அன்றும் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

காசுக்காகப் பெண்டு பிள்ளைகளைக்கூட விலை பேசும் "பெருமை" மாந்தரும் பிறந்து வளர்ந்து வாழ்ந்தும் வருகிறார்கள்; வையம் அவர்களைத் தாங்கிக் கொண்டுதானிருக்கிறது.

எல்லாம் தன்னாலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்ற போலி மாயத்திரைக்குள் தன் முகத்தை மூடிக்கொண்டு, இழிவுச் செயல்களையும் கீழ்மைப் பேச்சுக்களையும் சரளமாக நடைபயில விட்டிருப்போர் ஏராளம்! ஏராளம்!!

இப்படிப்பட்ட இயல்பினை, இயற்கையாய் அல்லது செயற்கையாய், தேவைப்பட்டு, அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டு ஏற்றுக்கொண்டிருக்கும் கூட்டத்துக்கிடையே, நண்பா,

"பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றுஎம் சிறுசெந் நாவே"

என்றோர் புலவர் பாடியும் போயிருக்கிறார் என்பது விந்தையா யிருக்கிறதா?

• • •

"என்ன ஏகாம்பரம்! எங்கே இவ்வளவு வேகம்? ரொம்ப தூரமோ?..."

"இல்லை, இல்லை, சும்மா கடைவீதி வரைக்கும் போய் வரலாம்னு போறேன்"

"நானும் அந்தப் பக்கம்தான் போறேன்."

"நல்லதாய்ப் போச்சு! பேசிக்கிட்டே போகலாம்!"

"உனக்கு சேதி தெரியுமா? மோட்டுக்காடு முத்துசாமி, மூணாந் தெரு முபாரக்குக்கு முன்னூறு ரூபா செலவு செஞ்சு கல்யாணம் பண்ணி வச்சாராமே!"

"அப்படியா! எனக்குத் தெரியாதே! காதும் காதும் வச்சாப்பலே நடந்திருக்கே"

"கல்யாணம் என்னமோ, ஊர் கூட்டி வச்சுத்தான் நடந்துது; கல்யாணச் செலவு தான்..."

"காதோடு காதா முடிஞ்சுப் போச்சுதோ"

"அவ்வளவுதான் விஷயம்! என்ன இருந்தாலும் முத்துசாமி, பெரிய மனுஷன் இல்லையா! பரம்பரைப் பணக்காரன்! பெருந்தன்மையும் பரம்பரயாவே வந்துடுது"

"நம்ப ஊர்லேயும் சில பேர் இருக்காங்க! என்னத்துக்கு?..."

"பணம் இருந்தா மட்டும் போதுமா ஏகாம்பரம், பண்பு வேணுமே பண்பு. முத்துசாமியோட தாராள மனசு, முபாரக் விஷயத்திலே மட்டுமில்லே! முத்தம்மா மகன் முகுந்தனுக்கு, அவரே செலவுக்குக் காசு கொடுத்து,

சிதம்பரத்திலே இருக்கிற ஒரு பிரண்ட் கம்பெனிக்கு சிபாரிசுக் கடிதாசியும் கொடுத்து அனுப்பினாராம்.''

''ரொம்பப் பெரிய மனுஷந்தான்!''

''மாதா கோவில் தெரு மரியா. அவள் மாமன் கிட்டே கடன் வாங்கிட்டிருந்தாளாம்; கண்ணீரோட வந்து நின்னு அழுதாளாம் அவ. 'நான் கணக்கைத் தீர்த்துடறேன் போ! நேராய் மாமனை வரச் சொல்லு'ன்னு சொல்லிப்பிட்டாராம்''

''கடைசீ வள்ளல் நள்ளிக்கு அப்புறம் பொறந்திருக்கிற ஒரு நல்லவர் போல இருக்கே''

''வள்ளல்கள் எல்லாம்கூட வந்து கத்துக்கிட்டுப் போகணும் போயேன்''

கடைவீதி வந்து விடுகிறது! ஏகாம்பரமும் சந்தானமும் எட்டி எட்டிப்போய்விடுகின்றனர். வேலைகளை முடித்துக்கொண்டு ஏகாம்பரம் திரும்புகிறான். எதிர்ப்படுகிறான் முபாரக்! கைதட்டி அழைக்கிறான் ஏகாம்பரம். காதில் விழாமல் நழுவிவிடுகிறான் முபாரக். ஏகாம்பரம் தனக்குள் நினைத்துக் கொள்கிறான்:

''பாவம், அந்தப் பெரிய மனுஷன், என்னமோ இவன் வீட்டில் விளக்கேத்தி வச்சிருக்கான்; இதைப் பாரேன்! மனுஷனைச் சட்டை செய்யிதான்னு...''

மரியாவின் மாமனைப்பார்க்கிறான் ஏகாம்பரம். 'என்ன சௌக்கியமா?'' என்கிறான்.

''சாகாமே இருக்கேன்ப்பா''

''என்ன இப்படிச் சொல்லிட்டே! மரியா கணக்கு தீர்ந்துப் போச்சில்லே''

மரியாவின் மாமன் பதில் சொல்லுவதற்குள் வண்டியொன்று குறுக்கே வந்து இருவரையும் பிரிக்கிறது. மாத்பூசை இன்னொருவர் அழைத்துப் போய்விடுகிறார். ஏகாம்பரத்துக்கு எதுவும் புரியவில்லை. விழித்துக் கொண்டே நடக்கிறார். மோட்டுக்காடு முத்துசாமியிடம் தான் ஒரு ஐநூறு கடன் கேட்க முடியுமோ என்ற சந்தேகம்! சபலத்தைத் தூண்டிவிட்டவன் சந்தானம்!

சந்தானத்துக்குப் பணமுடை! பல பேரிடம் பல்லிளித்துப் பார்த்துவிட்டு இந்த நடமுறையைத் தொடங்கிவிட்டான்! எப்படியும் முத்துசாமியிடம் பணம் கேட்டு வாங்கவேண்டும் என்பதற்காக!

உண்மையில் முத்துசாமியோ! எச்சிற் கையால் ஈ கூட ஓட்டமாட்டான்! சந்தானமோ, வாழ்ந்தாக வேண்டும்!! எப்படியும் வாழ்ந்தாக வேண்டும்!! அதற்கு இப்படியொரு நடைமுறை! இந்திரனே, சந்திரனே!! என்று நேர்முகமான வருணனையில் இறங்குவோரும் உண்டு! இதுபோல் மற்றொருவர் முன்னிலையில் புகழ்ந்துரைத்து, தன் பெயரைப் பதிவு செய்து கொள்வோரும் உண்டல்லவா! அதுபோல் சந்தானம், தான் வாழ வேண்டுமே என்பதற்காக கடன் கேட்டுப் பெறவேண்டுமே என்பதற்காக

''செய்யா கூறிக் கிளத்தல்''

என்ற தொழிலில் இறங்கிவிட்டான் ஏன்?

''பீடில் மன்னர் புகழ்ச்சி''

என்பதுபோல பெருமை யேதுமில்லை யெனினும், புகழ்ச்சிக்காக, கடைக்கண் பார்வைக்காக.

''செய்யாக் கூறிக் கிளத்தல்''

என்று இறங்கிவிட்டான். இதுபோன்ற இயல்பு எங்கட்கு இல்லை என்று கூறுவதற்காகத்தான் புலவர் இதனைப் பாடினார்.

வாழ்தல் வேண்டும் என்பதற்காக இலலாத
பெருமைகளை யெல்லாம் இருப்பதாகக் கூறிப்
பெருமைப்படுத்தும் சிறுமையை, எம் செவ்வைய
நா. செய்யாது''

என்கிறார் புலவர்! வன்பரணர் என்ற பெயருக்குச் சொந்தக்காரர்! புலவர் பெருமான் ஆயிற்றே! தன் நா, புண் நாவாகக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை காட்டுகிறார். புண்நாவாதலால் வந்தடைகிற வாழ்வு பற்றி அவர் அறிகிறார்! அனைவருமா அறிகிறார்கள்?

''அடுக்கிய கோடி பெறினும் குடிபிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்''

என்றார் வள்ளுவப் பெருந்தகை! குடிபிறந்தாருக்காகத்தான் இந்த இலக்கணம்! நற்குடிபிறந்த நன் மக்களுக்காக இலக்கணம்! இந்த இலக்கணத்தை எல்லோருடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா?

''கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தா
லும். சான்றோர் பழிக்கும் தீவினைகளைச் செய்ய
மாட்டார்கள்—நற்குடியிற் பிறந்தவர்கள்''

என்று தீர்ப்பே வழங்கி இருக்கிறார். இந்தத் தீர்ப்பு —நற்குடியில் பிறந்தவர்களுக்கல்லவா! 'குன்றுவ' தெய்வதென்பதே கொள்கையாய்க் கொண்டோருக்குப் பொருந்தாதே! ''செந்நா'' வின் சிறப்பறிந்தோருக்கல்லவா பொருந்தும்; ''புண்நா'' கொண்ட போலிகளுக்குப் பொருந்துமா? பொருந்தும் என்று நினைக்கலாமா நண்பா! சந்தானங்கள். இந்த இலக்கணங்களையே அல்லவா 'தீயவை, தீயினும் தீயவை' என்று வருணிப்பர்!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

என்றார் வடலூரார்! புண்நாகொண்டாரின் போக்கு புனித வாழ்வைப் பொசுக்கிவிடக் கூடும் என்றஞ்சி, அத்தகையோரின் உறவேகொள்ளக்கூடாது என்று எச்சரிக்கிறார்.

செய்யாக் கூறிக் கிளப்போரல்லவா மிகுந்துகொண்டிருக்கிறார்கள், காலத்தின் கோலத்தால்!

பாவம், காமராசரைப்பற்றியும், அவரது பெரம்பூர் பேச்சு பற்றியும் நினைக்கும்போது நமக்கு இப்படியெல்லாம் தான் நினைந்து பார்க்கவேண்டி யேற்பட்டு விடுகிறது.

காமராசரைப் படைத்ததும் காலம்தான்! அவர் செயல்படுத்திக் கொண்டு வருகிற கோலங்களைப் படைத்ததும் அந்தக் காலம்தானே!

யாருடைய புகழ்ச்சியை எதிர்பார்த்து இன்றைக்கு இதுபோன்ற ஆட்டங்களைத் தொடங்கிவிட்டிருக்கிறார்? ஆடாத ஆட்டமல்லவா ஆடிக் கொண்டிருக்கிறார்!

சந்தானமாவது தனக்கு முத்துசாமியிடம் கடன் வேண்டும் என்பதற்காக, தன் நாவைப் 'புண் நா'வாக்கிக் கொண்டான்,

காமராசர் நா, 'புண் நா'வாகி விட்டது ஏன்?

52 கோடியையும் தாண்டி விட்டதாம் இந்தியத்

துணைக் கண்டத்து மக்கள் தொகை! இந்தக் கணக்கில் காமராசர் இருப்பதும் இணைக்கப்பட்டிருக்கக்கூடும். இத்துணைக் கோடியில் எத்தனையோ 'புண் நா'க்கள்! எத்தனையோ 'செந்நா'க்கள்!

துணைக் கண்டத்துப் பொருளாதாரத்தில் முக்கால் பாகத்திற்கும் அதிகமானதை, இங்குள்ள சில 50க்குங் குறைந்த பண முதலைகள் தம் கை விரலிடுக்கின் கீழ் வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்ததனைத் தடுத்து நிறுத்திய "குற்றத்தை"ச் செய்துவிட்டார் பாவம் இந்திரா! இந்தியப் பிரதமர்!

> இந்திரா செய்த அது தவறு என்று கூறவும் முடியவில்லை; மக்களின் வலிய கரம் நினைவுக்கு வருகிறது. ஏற்கவும் முடியவில்லை. கோமான்களின் கோரப்பார்வை நினைவுக்கு வருகிறது. எதையாவது பேசவேண்டும்; எதையாவது செய்யவேண்டும். அதற்காகவே—அந்தப் பண முதலைகளின் புகழ்ச்சிக்காக வேண்டியே காமராசர் 'புண் நா' வாக்கிக் கொண்டார்.

என்று குற்றம் சாட்டிவிடலாமா நண்பா! காமராசர் சதா சர்வகாலமும் ஏழை, ஏழை ஏழை என்றே மந்திரோச்சாடனம் செய்துகொண்டிருக்கும் ஒருபரம ஏழை! எந்த ஒருவருடைய தலை வரண்டிருந்தால்கூட, நாட்டாட்சி, காட்டாட்சியாகிவிட்டிருக்கிறது என்று பேசுபவர்! தனியொருவனுக்கு உணவில்லையெனில், இச்செகத்தினை அழித்திடுவோம் என்றாரே பாரதியார், அதுபோல!

அவரா பணத்திமிங்கிலங்களின் 'புகழ்ச்சி' வேண்டிக்கொண்டிருக்கிறார்! நம்பமுடியாதுதான், நடந்துவிட்டிருக்கும் உண்மையினை, அவரே முன்வந்து நாட்டுக்கறிவிக்கும் வரையில் நம்பமுடியாதுதான்! இவர் ஒரு ரகம்! சந்தானம்போல!

மனிதர்கள் எத்தனையோ ரகமானவர்கள் அல்லவா! காலம் அப்படிப் படைத்துவிட்டிருக்கிறதல்லவா! இங்கே ஒரு மனிதரையும், நாயையும் "எடுத்துக்காட்டி" இருக்கிறேன். படித்துவிட்டுப் பெருமூச்சுவிடலாம்.

• • •

ஒரு சிறு நாய்க்குட்டி!

அதை ஒருவன் சீண்டிவிடுகிறான்—அது 'பிறாண்டி' விடுகிறது—விரலில் அவனுக்கு இரத்தம் கசிகிறது.

அவன் நாயைத் துரத்திப் பிடிக்கிறான் கொன்று போடுவது என்று.

சிறு கும்பல் கூடிவிடுகிறது.

நாய், பயந்துவிட்டது.

அவன், விரலில் ஒழுகிய இரத்தத்தைக் காட்டிப் பேசுகிறான்.

நாயைக் கொல்லத்தான் வேண்டும் என்று ஆதரவு பேசுகிறார்கள் பலர்.

கும்பலைக் கண்டு, ஒரு போலீஸ் அதிகாரி வருகிறான்.

விரலைக்காட்டி விஷயத்தை விளக்குகிறான் கடிபட்டவன்.

கடுங்கோபம் பிறக்கிறது அதிகாரிக்கு, நாயின் மீது.

போக்கிரி நாய்; சுட்டுத் தள்ளவேண்டும்—சிவம் கடித்துவிட்டதா — பயப்படாதே—இதைக் கொன்று போடலாம் — யார் இந்த நாய்க்குச் சொந்தக்காரன் — மடையன்—இதை இப்படி வீதியிலே உலவவிட்டிருக்கிறானே—அவனைச் சும்மா விடக்கூடாது—சட்டப்படி தண்டிக்கவேண்டும். நாயைப்பார் நாயை; அவலட்சணம்; மசநாயை வெளியே விடுவது. மகாபெரிய குற்றம்— அவனைச் சும்மாவிடக்கூடாது.

அதிகாரி வீராவேசமாகப் பேசுகிறான்—கடிபட்டவன் நன்றி கூறுகிறான். கூட்டத்தினர் வியந்து புகழ்கிறார்கள், அதிகாரியை.

நாய், மிரள மிரள விழிக்கிறது.

போலீஸ்காரனை அழைத்தான் அதிகாரி, "ஏய்! அந்தப் போக்கிரி நாயைப் பிடித்து இழுத்துவா......' என்று உத்தரவிடுகிறான்.

"இது யாருடைய நாய்" என்று அதிகாரி மீண்டும் கேட்கிறான்—வழக்குப் போட்டுத் தண்டிக்கவேண்டுமே அதற்காக.

கூட்டத்தில் ஒருவன், மெல்லிய குரலில் "எஜமானே, இது ஜனரல் ஜீகலோவுடைய நாய்........." என்கிறான்.

அவ்வளவுதான்: அதிகாரி மாறிவிட்டான்.

"யாருடையது, யாருடையது—ஜெனரல் ஜீகலோவுடைய நாயா? அடடா; ஏ கான்ஸ்டபிள்! இதோ இந்தக் கம்பளிக் கோட்டை அதன்மீது போடு, பாவம். வாடைக் காற்றால் உடல் வெடவெடவென ஒடுக்குகிறது—நல்ல நாய்...அழகாக இருக்கிறது...இது போய் கடித்ததாமே...குட்டி இது, பாவம். நீயோ தடியன்,

பொய்யா மொழிகள்

வானத்தை வில்லாக வளைக்கவும், மணலைக் கயிறாகத் திரிக்கவும், ஏழுகடலை ஒரேயடியாகத் தாண்டவும் ஆண்கள் தயாராக இருக்கிறார்கள். இதெல்லாம் எதற்காக என்றால் பெண்ணின் கடைக்கண் பார்வைக்காக.

—உமர்கயாம்.

வில்லுக்கு நாணைப்போல், ஆணுக்குப் பெண் அமைந்திருக்கிறாள். அவள் அவனை வளைக்கிறாள்; என்றாலும் அவனுக்குக் கீழ்ப்படிகிறாள். அவள் அவனை இழுக்கிறாள்; என்றாலும் அவனைப்பின் பற்றுகிறாள். ஒன்றில்லாமல் ஒன்றினால் பயனில்லை.

—ஆங்கிலக்கவி வோர்ட்ஸ்வொர்த்.

பெண் வழுவழுப்பான களிமண்ணைப் போன்றவள்! ஆண்தான் அதில் கலையழகை உருவாக்கவேண்டும். அவ்வாறு உருவாக்க இசைந்து கொடுப்பவள்தான் பெண்!

—அரிஸ்டாட்டில்.

பெண்களால் உலகம் அழிந்ததுண்டு; உண்மைதான், ஆனால் அழிவிலிருந்து உலகத்தைக் காப்பாற்றி வருபவர்களும் பெண்கள்தான் என்ற உண்மையை மறக்கமுடியாது.

—சாக்ரடீஸ்.

உன்னையாவது, இது கடிப்பதாவது. எங்கேயோ ஆணியில் விரலைக் கீறிக்கொண்டிருப்பாய்... அக்ரமக்காரா... விலகு...விலகு...'' என்று விரட்டுகிருன்!

அதிகாரியின் ஆதரவு நாய்க்குக் கிடைக்கிறது. காரணம்? ஜெனரல் வீட்டு நாய்.

''எஜமானே! இவன் சிகரட் துண்டை நாயின் வாயில் வைத்தான்—அதனுல்தான் கடித்தது—மடையன்—'' என்று ஒருவன் கூறுகிருன்.

கடிபட்டவன், மறுக்கிருன்.

அதிகாரியோ, நாயின் வக்கீலாகிவிட்டார்.

போலீஸ்காரன் சொல்லுகிருன், ''இது ஜெனரலுடையது அல்ல, எஜமான்; அவரிடம் இப்படி ஒரு நாய் கிடையாது. அவருடைய நாய், இப்படியா திரியும்?'' என்று.

''நிச்சயமாகவா?'' என்று அதிகாரி கேட்கிருன்.

ஆமாம்என்று உறுதி அளிக்கிருன் போலீஸ்காரன். உடனே அதிகாரி மனிதன் பக்கம் சேர்ந்துகொள்கிருன்.

''ஜெனரலுடையது அல்ல இது. இது கீழ் ஜாதி நாய்; முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே. இது எவனே ஒரு ஏனேதானேவுடையது—அவனைச் சும்மா விடக்கூடாது'' என்று அதிகாரி பேசுகிருர்; கடிபட்டவன் மகிழ்கிருன்.

போலீஸ்காரன், ''ஜெனரலுடையது அல்ல... ஆனுல் ஒருவேளை அவருடையதுதானே, என்னவோ ......'' என்று மீண்டும் இழுத்தாற்போல் பேசுகிருன்.

''இது ஜெனரல் வீட்டு நாய்தான்'' என்று கூட்டத்தில் ஒருவன் கூறுகிருன்.

அதிகாரி, மீண்டும் மாறிவிட்டான்.

நாய்க்கு, டாக்டராகவே ஆகிவிட்டான்.

காற்று அடிக்கிறது—நாய்க்குப் போர்வை வேண்டும் — நல்ல நாய் — ஜாதி நாய் — இந்தப் பயல், சிகரட் துண்டால் இதற்குச் சூடிட்டிருக்கிருன்—அதனுலேதான் கடித்தது—இவன் செய்தது போக்கிரித்தனம்'' என்று பேசுகிருர். நாயிடம் காட்டும் அன்பு தன்னிடம் இல்லையே, ஏன் என்று கடிபட்டவன் ஆச்சரியப்படுகிருன். நாய்தான்; அவலட்சணமானதுதான்; ஆளைக் கடித்துத்தான் விட்டது. விரலில் இரத்தம்கூடத்தான் கசிகிறது. என்ருலும், சாமான்யர் வீட்டு நாயா; ஜெனரலுடையது.

மனிதன் பக்கமா சேரமுடியும் அதிகாரியால்; மாளிகை நாய் பக்கம்தானே சேரவேண்டும்.

ஜெனரல்வீட்டுச் சமையற்காரன் தற்செயலாக அந்தப்பக்கம் வந்தான் — அவனைக் கேட்கலாமே, என்றனர் சிலர். அவன் சொன்னுன், ''இதுவா? இப்படிப்பட்ட நாயையா ஜெனரல் வளர்ப்பார்...?'' என்று கேட்டான். உடனே மீண்டும் அதிகாரி மனிதன் பக்கம் சேர்ந்து கொண்டார்.

''ஆமாம், ஆமாம்; இது, தெருப்பொறுக்கி; இதையாவது, ஜெனரல் தொடுவதாவது—இதை ஒழித்துவிடவேண்டியதுதான் — பாவம் இரத்தம் கசிகிறது; இவனுக்கு'' என்று கூறினுர்.

சமயற்காரன் பேச்சை முடிக்கவில்லை,

''இது ஜெனரலுடையது அல்ல—அவர் அண்ணன் வந்திருக்கிருர், மாளிகைக்கு, அவருடையது இந்த நாய்.'' என்ருன்.

அதிகாரி மாறி விட்டார்,

ஜெனரலுடைய அண்ணன் ஒரு பிரபு.

பிரபுவின் நாய், மனிதனைவிட மேல்தானே—பல வகையில்.

அதிகாரி, பிரபுவின் நாய்க்குத்தானே பரிவு, ஆதரவு, காட்டவேண்டும்.

எனவே, நாய்க்குட்டியை அன்புடன் அழைத்தார் கொஞ்சினுர், கொஞ்சம் குறும்பு; இவனைக் கடித்து விளையாடி இருக்கிறது—நல்ல ஜாதி நாய்—பிரபு தெரியாமலா வளர்ப்பார்—கொண்டுபோ—ஜாக்ரதை—என்று கனிவுடன் பேசி, நாய்க்குட்டியைச் சமயற்காரனிடம் கொடுத்தார்.

மனிதனைத் தோற்கடித்த நாய் வெற்றி நடை போட்டது.

கசியும் இரத்தத்தைக் கட்டிக்கொண்டு மனிதன் நிற்கிருன். திகைத்து! மற்றவர்கள் அவனைக் கேலி செய்கிருர்கள்.

* * *

கேவலம் நாய்தான்! போலீஸ் அதிகாரியையே அல்லவா பாடாய்ப்படுத்திவிட்டது! திக்கு முக்காடச் செய்துவிட்டது. மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அந்த நாய் எவ்வளவு லாவகமாக எடுத்துக்காட்டி விட்டது! எப்படி முடிந்தது? இடத்தால் என்கிருயா நண்பா! ஆம்! இடத்தால்தான் அது முடிந்தது!

இந்தக் கதையை நான் படைக்கவில்லை; நம் நாட்டுக் கதையுமல்ல, ரஷ்யச் சரக்கு! பொதுவுடைமைப் பூங்காவிலே பூத்த மலர்! பரப்பும் மணம் இது போல! தவருன படைப்புக்கூட அல்ல—தத்துவ உண்மைகள் மலிந்த முத்தாரம்! செக்காவ் என்பவர் எழுதியிருக்கிருர் ''பச்சோந்தி'' என்ற பெயரில் தமிழாக்கம் கூட என்னுடையதல்ல! பேரறிஞர் அண்ணு அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய சிறுகதையென்றின் ஒரு சிறு பகுதி. தமிழாக்கம மட்டுமல்ல தொகுப்புமுறையே கூட அப்படியே அண்ணு அவர்களுடையது தான்!

காமராசரைக்கூட இதனேடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்! ஏற்றவிதமாக! இடத்துக்குத் தக்கபடி! காலம் காமராசரை அப்படி ஆட்டுவிக்கிறது! அவர் என்ன செய்வார் பாவம்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

...சிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3...
...6 திருக்கச்சிநம்பி தெரு வள்ளி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.